07.07.2025

அ.வ.எண்.38/2019

பி.சா.1 - பூபதி, த/பெ. சாமிநாதன்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 07.07.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி அவருடைய மேல்புறம் உள்ள சுவற்றை பூசவிடவில்லை என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி வீட்டின் தாவா சொத்திற்கு மேல்புறமும், எங்களது பூமியின் கிழபுறமும் உள்ள 2 அடி பாதையில் நாங்கள் வைத்துள்ள மரக்கட்டையை அகற்ற கோரி செயலுறுத்து கட்டளை பரிகாரம்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது சொத்தின் ச.எண்.441/1 ஆகும். க.ச.எண்.442/2 வாதியினுடைய சொத்து ஆகும், அதற்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லை. வாதி, வீடு கட்டி 40 ஆண்டுகள் இருக்கும்.

2. வாதியின் மேல்புற சுவர் காரை பூசி பெயிண்ட் அடித்துள்ளார் என்றால் சரிதான். வாதியின் மேல்புற சுவற்றின் ஜன்னல் உள்ளது. அதில் 2 அடி SUN SHADE வைத்துள்ளார். வாதி, அவருடைய க.ச.எண்.442/2 ல் உள்ள மேல்புறசுவற்றை பராமரித்து கொள்ள எனக்கு ஆட்சேபைண இல்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர் வழக்குரையில் வாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் மேல்புறத்தில் எவ்வித இடமும் விடாமல் அறுதிவரை வீடு கட்டியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி, அறுதிவரை வீடு கட்டியிருப்பதால் நான் அவரை மேல்புறம் உள்ள சுவற்றை பராமரிக்க வேண்டாம் என்று அவரை தடுத்தேன் என்றால் சரிதான்.

3. வாதி மேல்புற சுவற்றை பராமரிக்க வரக்கூடாது என்பதற்காக வாதியின் வீட்டிற்கு மேல்புறமுள்ள 2 அடி சந்தில் வாதி உள்ளே வரக்கூடாது என்பதற்காக மரக்கட்டைகளை அடுக்கி வைத்தேன் என்றால் வடபுறமாக மரக்கட்டைகளை அடுக்கிவைத்து, தென்புறமாக மரக்கட்டைகளை அடுக்கி வைக்கவில்லை. நான் மரக்கட்டைகளை எடுத்தால் தான் வாதி மேல்புற சுவற்றை பராமரிக்க முடியும்

என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை இருதரப்பினர்கள் முன்னிலையிலும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையிலும் அளந்தார் என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளந்ததற்கான அறிக்கை மற்றும் வரைபடம் என்றால் சரிதான். **நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வட்ட சார் ஆய்வாளரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வபைரடத்திற்கு நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களின் படி வாதி அவருடைய தாவா 1ம் அயிட்ட சொத்தில் மேற்குபுறத்தில் வடகோட்டில் 2.6 அடியும், தென்கோட்டில் 2.3 அடியும் இடம் விட்டு தான் அவருடைய மேல்புற சுவர் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, வடகோட்டில் 1 அடி நிலம் உள்ளது.

5. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தவறு என்பதற்கு வேறு எந்த நடவடிக்கையாவது எடுத்துள்ளேனா என்றால் இல்லை. க.ச.எண்.442/1 ற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் பட்டா உள்ளது. மேற்படி பட்டா எனது தாய்வழி தாத்தா குருசாமி பெயரில் உள்ளது. க.ச.எண்,442/4 நம்பர் காலையில் இருந்து வாதியின் சொத்தான க.ச.எண்.442/2 நம்பர் காலை வழியாக க.ச.எண்.442/1 ற்கு தடம் உள்ளதாக குறிப்பிட்டு எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களுக்கு தென்புறம் பொது வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான்.

6. வாதியின் தாவா 1 ம் அயிட்ட சொத்தில் உள்ள மேல்புற சுவற்றை பராமரிப்பதை தடுக்க எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், வாதி தனது சொத்தை பராமரிக்க போதுமான இடம் விட்டு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வந்து அளவீடு செய்தபோது கட்டைகளை

அப்புறப்படுத்திவிட்டேன், மீண்டும் தற்போது கட்டைகளை வைத்துள்ளேன். நான் கட்டைகள் வைத்துள்ள இடம் வாதியின் இடம் என்றும், அவ்வாறு கட்டைகளை வைக்க எனக்கு உரிமை இல்லை என்றும், எனவே செயலுறுத்து கட்டளை பரிகாரத்தின்படி நான் கட்டைகளை அகற்ற கடைமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur